2009 பிப்ரவரி 24]

சராசரியாக ஒரு பேருந்துக்கு ரூபாய் 4,000-க்கு மேல் வருவது இல்லை. ஆனால் ஒரு பேருந்துக்கு முழுமையாக வரவு-செலவு சரியாக இருக்க வேண்டுமென்று சொன்னால், 7,500 ரூபாய் இருந்தால்தான் ஒரு நாள் செலவுக்கு சரியாக இருக்கும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் வண்டி கொட, கொட என்று இருப்பதாகச் சொல்கிறார். இவர், நிறுத்திய பேருந்தை விட வேண்டுமென்று சொல்கிறார். எவ்வளவு நஷ்டம் வந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர், பயணிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டு, பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பேருந்து நாளையிலிருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

மருத்துவமனைக் கட்டடம்

***891—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.95 இலட்சம் செலவில் புதிய கட்டடப் பிரிவுகள் கட்டப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

[2009 பிப்ரவரி 24

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு நான் கேட்ட கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, என் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நன்னிலம் தொகுதியில் உள்ள திருமருகல் ஒன்றியம், கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் ஏனங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது; அதைச் சீரமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டும்தான் கிட்டத்தட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், இன்னும் சொல்லப்போனால் கிட்டத்தட்ட 1,383 மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. 38 மருத்துவமனைகளுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றது. அவற்றிற்கும் வருகின்ற நிதி ஆண்டில் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் தங்களுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலேயிருந்தும் இந்தப் பழுதடைந்த கட்டடத்தைக் கட்டிக்கொள்ளலாம். இருந்தாலும், அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றித் தருகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். நன்னிலம் மருத்துவமனையில் நான்கு

2009 பிப்ரவரி 24]

மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்னும் இரண்டு இடங்கள் காலியாக இருக்கின்றன. குறிப்பாக, டி.ஜி.ஓ. படித்த பெண் மருத்துவர் அந்த மருத்துவமனைக்குத் தேவை என்பதால், அந்தக் காலியிடங்களை நிறைவு செய்ய வேண்டும். அதோடு ஐந்து மருத்துவர்கள் இருந்தால்தான் இரவில் தங்கிப் பணிபுரிய முடியும் என்ற நிலை உள்ளது. தற்போது இரவில் மருத்துவர்கள் யாரும் தங்கிப் பணிபுரிவதில்லை. எனவே, அந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்து இரவில் மருத்துவர்கள் பணிபுரிவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் காலியாகவிருந்த 93 மருத்துவர் பணியிடங்களுக்கு நேற்றையதினம், 23-2-2009 அன்று, சிறப்பு நேர்காணல் நடைபெற்று அவற்றில் 71 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்னிலம் மருத்துவமனையில் ஆரம்ப காலத்தில் மருத்துவர்கள் இல்லை என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இப்போது மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்று ஒப்புக்கொண்டுள்ளார்கள். இப்போது திருவாரூர் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக அனைத்து மருத்துவமனைகளிலும் ஓரிரு மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, நன்னிலம் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அது சிறப்புப் பிரிவு மருத்துவமனையாக இயங்கி வருகிறது. மேலும், அந்த மருத்துவமனை ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையமாகச் செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை—இரவு நேரத்தில் மருத்துவர் தங்கியிருப்பது என்பது தாலுகா மருத்துவமனையில் இல்லை. அங்கே night duty-க்கு nurses இருப்பார்கள். அவசரம் என்றால் அங்கே call duty-யிலே doctor-கள், இருப்பார்கள். அவர்களை அழைத்து மருத்துவம் செய்துகொள்வார்கள். அங்கே எப்போதும், 24 மணி நேரமும் செவிலியர்கள் இருந்து பணியாற்றுவார்கள். அதனாலே, அவசரக் காலத்திலே மருத்துவர் தேவை என்றால் அதற்கென்று மருத்துவர்கள் பணியில்

அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களைக் கூப்பிட்டால், வந்து சிகிச்சை அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

தொழிற்பேட்டை

***37293—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியத்தில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், ஏறத்தாழ 49 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு பேரூராட்சியும் அடங்கிய ஒன்றியம். அங்கு விவசாயம் மட்டும் தான் இருக்கிறது. வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. விவசாயம் செய்வதற்குக்கூட தற்போது அங்கே கிணற்றுப் பாசனம்தான் இருக்கின்றது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கின்ற நிலையில், இப்போது மின் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் அங்கே இருக்கிற, ஏறத்தாழ 3,000 கிராமங்களைச் சார்ந்திருக்கிற அந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பிழைப்பு நடத்துவதற்காக, கட்டுமானப் பணிகளிலே ஈடுபடுவதற்காக 60, 65 கிலோ மீட்டர்